வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி 06.04.2025 நேரம் மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

*முர்மு* (7)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவிற்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். வக்பு சட்டத் திருத்த மசோதா இரண்டு தினங்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா குடியரசு தலைவரின் ஒப்புதலுக்கான அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், குடியரசு தலைவர் இதற்கான ஒப்புதலை வழங்கி உள்ளார். இதனையடுத்து, வக்பு சட்டத் திருத்த மசோதா சட்டமாகி உள்ளது.

*முர்மு பயணம்* (10)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு போர்ச்சுக்கல் மற்றும் ஸ்லோவாக்கியா, உள்ளிட்ட நாடுகளுக்கு நாளை முதல் வரும் 10 ஆம் தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். இதனை ஒட்டி, அவர் இன்றிரவு புதுடெல்லியில் இருந்து புறப்பட்டு செல்ல உள்ளார். அவரது போர்ச்சுக்கல் பயணத்தின் போது அந்நாட்டு அதிபருடன் உயர் மட்ட அளவிலான பேச்சுவார்த்தைகளை அவர் நடத்த உள்ளார். அங்கு அந்நாட்டு பிரதமர், நாடாளுமன்ற தலைவர் ஆகியோரும் குடியரசு தலைவரை சந்திக்கின்றனர். இதனை தொடர்ந்து, ஸ்லோவாக்கியா-வுக்கு பயணம் மேற்கொள்ளும் திருமதி திரவுபதி முர்மு அந்நாட்டு அதிபர், மற்றும் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

***பிரதமர் பாம்பன் 1*** (10)

ராமேஸ்வரம் தீவை பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் அதி நவீன பாம்பன் ரயில் பாதையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார். இலங்கையில் 3 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்ட அவர், இன்று பிற்பகல் இலங்கையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் மண்டபம் வந்து சேர்ந்தார். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் பாம்பன் செங்குத்து லிப்ட் கடல் பாலத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து பாலத்தின் வழியாக முதன்முறையாக செல்லும் கடலோர காவல் படை கப்பலையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், ராமேஸ்வரம்-தாம்பரம் எக்ஸ்பிரஸ் ரயிலையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த ராமேஸ்வரம் பாலம் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

வாய்ஸ்

***பாம்பன் வாய்ஸ்*** (18)

தனுஷ்கோடி நிலப்பகுதியையும், ராமேஸ்வரம் தீவையும் இணைக்கும் வகையில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு கடந்த 1914 ஆம் ஆண்டு முதல் ரயில் சேவை பாம்பன் பாலத்தில் நடைபெற்றது. 117 ஆண்டுகளை கடந்த இந்த பாலம் சில ஆண்டுகளுக்கு முன்னர் பாதிப்படைந்தது. பாலத்தை திறந்து மூடுவதில் ஏற்பட்ட சிக்கலால் பாலத்தின் சேவை கடந்த 2022 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. தற்போது இந்த பாலம் 550 கோடி ரூபாய் செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலம் இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு பாலமாகும். பாலத்தின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள லிப்ட் தொழில்நுட்பம் ஆசியாவிலேயே முதன் முறையாக பாம்பனில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. லிப்ட் கடல் காற்றால் துரு பிடிக்காமல் இருக்க

உயர்தர பாதுகாப்பு வண்ணப்பூச்சு பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 58 ஆண்டுகள் வரை தாங்கும் சக்தி உடையதாகும். பாம்பன் பாலத்தில் தற்போது 75 கிலோ மீட்டர் வேகத்தில் ரயிலை இயக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாலத்தின் மையப் பகுதியில் மட்டும் 50 கிலோ மீட்டர் வரை ரயில்களை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பாலத்தின் உயரம் கடல் மட்டத்தில் இருந்து 22 அடியாகும். பாலத்தை இயக்க கணினி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

***<u>மோடி சாமிதரிசனம்</u>*** <u>(6)</u>

இன்று நாமநவமி என்பதால் இன்று பிற்பகல் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவிலுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி சென்று அங்கு சுவாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அர்ப்பணித்து, வேறு பல திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்

**<u>வேவ்ஸ் (7)</u>**

உலகெங்கிலும் உள்ள ஊடக தலைமை நிர்வாக அதிகாரிகள், பொழுதுபோக்கு சின்னங்கள் மற்றும் படைப்பாற்றல் மிக்கவர்களை ஒருங்கிணைக்கும் முதல் உலக ஆடியோ-விஷூவல் பொழுதுபோக்கு உச்சி மாநாடு வரும் மே மாதம் 1 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ளது. இதனை ஒட்டி, சென்னையில் நேற்று வேவ்ஸ் அனிமேஷன் மற்றும் ஜப்பானிய பாணி காமிக்ஸ் மாங்கா நிகழ்ச்சிகள் நேற்று சென்னையில் நடைபெற்றது. இது தொடர்பான ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

வேவ்ஸ் வாய்ஸ் (9)

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்துடன் இணைந்து, இந்திய ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு சங்கம் நடத்திய வாம் எனப்படும் வேவ்ஸ் அனிமேஷன் போட்டி நேற்று சென்னையில் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த போட்டியில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இருந்து 90 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டி உள்ளூர் கலைஞர்கள் மற்றும் தேசிய கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதாக அமைந்தது. இந்த திறமைகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக இந்திய ஊடக மற்றும் பொழுதுபோக்கு சங்கத்தின் செயலாளர் திரு அங்கூர் பாசின் தெரிவித்துள்ளார்.

மோடி இலங்கை (18)

இலங்கையில் 3 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்ட பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திசநாயகே-வை சந்தித்து பேசினார். மனிதாபிமான அடிப்படையில் தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபரிடம் அவர் வலியுறுத்தினார். இருதலைவர்களும் நடத்திய பேச்சுவார்த்தையில், இந்தியாவிற்கு எதிராக இலங்கையை பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று அதிபர் திரு அனுர குமார திசநாயகே உறுதி அளித்துள்ளார். பின்னர் இரு நாட்டு தலைவர்களின் முன்னிலையில் எரிசக்தி, தகவல் மற்றும் தொலைதொடர்பு, டிஜிட்டல் மயமாக்கல், வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் 7 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இரு நாடுகளுக்கும் இடையே முதன் முறையாக ராணுவ ஒப்பந்தம் கையெழுத்தானது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களும் இணைந்து காணொளி காட்சி மூலம் சம்பூர் சூரிய சக்தி உற்பத்தி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினர். தமது பயணத்தின் இறுதி நாளான இன்று காலை பிரதமர் திரு நரேந்திர மோடி,

அனுராதபுரத்திற்கு சென்றார். அங்குள்ள ஜெயஸ்ரீ போதி ஆலயத்திற்கு சென்ற அவர் தலைமை புத்த மத துறவியின் ஆசி பெற்றார். பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் புத்தகத்தில் குறிப்புகளை எழுதினார்.

*பிஜேபி நிறுவன தினம்* 1(17)

பாரதிய ஜனதா கட்சியின் 45 ஆவது நிறுவன தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அக்கட்சியின் தொண்டர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் இன்று வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பல ஆண்டுகளாக பாஜக வை தட்டியெழுப்ப பாடுபட்ட தொண்டர்களின் போராட்டங்கள் மற்றும் தியாகங்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். இந்தியாவின் முன்னேற்றத்திற்காகவும், ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்ற கனவை நனவாக்க தமது ஒப்பற்ற உறுதிப்பாட்டை இந்த முக்கியமான நாளில் மீண்டும் நினைவூட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார். இதேபோன்று பாஜக தலைவர் திரு ஜே பி நட்டாவும், பாரதிய ஜனதா கட்சியின் நிறுவன தினத்தை ஒட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அக்கட்சியின் தலைமையகத்தில் தொண்டர்களிடம் உரையாற்றிய அவர், கட்சியின் சித்தாந்தம் இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக கூறினார். நிகழ்ச்சியில், பாஜக வின் நிறுவன தலைவர்கள் ஷியாமா பிரசாத் முகர்ஜி, பண்டிட் தீன் தயாள் உபத்யாயா, அடல் பிகாரி வாஜ்பாய், உள்ளிட்டோரின் திரு உருவ சிலைகளுக்கு அவர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

*பிஜேபி நிறுவன தினம்* 2(6)

பாஜக வின் நிறுவன தினத்தை ஒட்டி, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் நாட்டு மக்களுக்கு சேவை ஆற்றுவதில் முழுமையான ஈடுபாட்டுடன், உயிர் தியாகம் செய்த பல்வேறு முன்னாள்

தலைவர்களையும், நிர்வாகிகளையும் அவர் நினைவு கூர்ந்தார். பாஜக மேன்மேலும் வளர பாடுபடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<u>*அமித் ஷா* (10)</u>

இப்கோ உர தொழிற்சாலையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் காரணமாக இன்று நானோ யூரியா மற்றும் நானோ DAP ஆகியவை உலகில் இந்தியாவின் நற்பெயரை உயர்த்தி உள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார். அவர் இன்று, குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற இப்கோ உர தொழிற்சாலையின் பொன்விழா கொண்டாட்டங்களில் பங்கேற்று பேசினார். நிகழ்ச்சியில், இப்கோவின் விதை ஆராய்ச்சி பிரிவையும் அவர் திறந்து வைத்தார். இப்கோவின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் போது இது உலகின் கூட்டுறவுத் துறையில் ஒரு முத்திரையை பதிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<u>*ராமநவமி* (5)</u>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று ராமநவமி மத உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. விஷ்ணுவின் 7 ஆவது அவதாரமான ராமரின் பிறப்பை இந்த விழா குறிக்கிறது. அயோத்தியில் மக்கள் ராமநவமியை உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர். ராமநவமியை முன்னிட்டு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஐபிஎல் (3)

ஐபிஎல் டி-20 கிரிக்கெட் போட்டியில், இன்று நடைபெறும் ஆட்டத்தில், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி-குஜராத் டைட்டன்ஸ் அணியை எதிர் கொள்கிறது. ஐதராபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு இப்போட்டி நடைபெற உள்ளது.

ஜம்மு காஷ்மீர் (7)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று ஜம்மு காஷ்மீருக்கு 3 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு பாதுகாப்பு நிலைமையை ஆய்வு செய்யும் அவர், அங்கு பணியாற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாட உள்ளார். தனது பயணத்தின் போது அவர், ஜம்மு காஷ்மீரின் பாஜக எம்எல்ஏ – களை சந்தித்து, ஆய்வுக் கூட்டங்களையும் நடத்த உள்ளார். பின்னர் அமர்நாத் வருடாந்திர யாத்திரைக்கும் அவர் தலைமை தாங்க உள்ளார்.